IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, SALEM.

LAOP.No.165/2019

CW-2 is solemnly affirmed on 17.03.2023 in accordance with the provisions of the Oaths Act No.44 of 1969.

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜோதி | Caste | : |
| W/o. | : விஜயகுமார் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட சூரமங்கலம் மண்டல நகர சார் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் மெய்யனூர் கிராமம் வார்டு-எம், பிளாக் 10, டிஎஸ்.நெ.26, பழைய புல எண்.32/4 ன் புலப்பட நகல், மற்றும் டிஎஸ்எல்ஆர் எக்ஸ்க்ராக்ட் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க குறிப்பிடப்பட்டுள்ளது. மெய்யனூர் கிராமம் பழைய சர்வே எண்.32/4, புதிய சர்வே எண்.26ல் 0.0674.5 சதுர மீட்டர் கூத்த கவுண்டர் மகன் நாராயண கவுண்டர் பெயரில் பட்டாவாக டிஎஸ்எல்ஆர்-ல் தாக்கல் ஆகி உள்ளது. அதேபோல சர்வே எண்.26/2ல் 0.0022.0 சதுர மீட்டர் இடத்தை நெடுஞ்சாலை துறையினர் கையகப்படுத்தி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மெய்யனூர் கிராமம் வார்டு எம், பிளாக் எண்.10ல் டவுன் சர்வே எண்.26/2ல்

மாநில நெடுஞ்சாலைதுறைக்கு 0.0022.0 சதுர மீட்டர் இடத்தை எடுத்ததாக FMB பிளானில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி FMB பிளானை எனக்கு முன்பிருந்த நகர சார் ஆய்வாளர் தயார் செய்துள்ளார். மெய்யனூர் கிராமம், வார்டு எம். பிளாக் 10, டவுன் சர்வே் எண்.26/2, பழைய புல எண்.32/4ன் டிஎஸ்எல்ஆர் Ex.C6(அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது). மேற்படி இடத்திற்குரிய புலப்பட நகல் Ex.C7(அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

2 மற்றும் 3வது கோருநர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :

மனு சொத்திற்கு சென்று பார்த்து அளவிட்டோமா என்றால் ஆட்சேபனை இருந்ததால் அளக்கவில்லை. யார் ஆட்சேபனை செய்தார்கள் என்றால் பெயர் ஞாபகமில்லை. மனுசொத்திற்கு கிழக்குபுறம் தேவி சிட்பண்ட்ஸ் பில்டிங் உள்ளது தெரியுமா என்றால் ஞாபகமில்லை. வடக்கே ஜங்சன் செல்லும் ரோடு உள்ளது என்றால் சரிதான். தெற்கே குடியிருப்பு பகுதிகள் உள்ளன என்றால் சரிதான். மேற்குபக்கம் சாம்பசிவ ரெட்டியாரின் வீடு உள்ளது என்றால் தெரியாது. மனுசொத்தில் ப்ளூ மூன் என்ற பார்பிக்யூ ஓட்டல் உள்ளது என்றால் சரிதான். அதை யார் நடத்தி வருகிறார்கள் என்றால் தெரியாது. மனுசொத்தில் டவுன் சர்வே எப்போது நடைபெற்றது என்றால் 2000ம் வருடத்தில் நடைபெற்றது. டவுன் சர்வே செய்யும்போது யார் யார் பெயரில் கிரயப்பத்திரம் உள்ளது என்பதை பார்க்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. மனு சொத்தின் பழைய சர்வே எண்.32/2 என்றால் சரியல்ல. அது சர்வே எண்.32/4 ஆகும். இது வார்டு எம். பிளாக் 10ல் உள்ளது என்றால் சரி. மேற்படி இடத்தின் நகர புல எண்.26 என்றால் சரி. இதற்கு டவுன் சர்வே எண்.26க்கு பழைய சர்வே எண்.32/2 என்றால் எங்கள் சரியல்ல. எங்கள் ஆவணங்களில் சர்வே எண்.32/4 என்று உள்ளது. 4வது கோருநர் நாரயாணன் மகன் பழனிசாமி மற்றும் 5 நபர்கள் மனுசொத்தை

பொருத்து 20.07.2022ல் பட்டா வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஏற்கனவே நாரயாணன் மகன் பழனிசாமி மற்றும் 5 நபர்கள் 20.07.2022ல் வாங்கிய பட்டாவை 10.09.2022ல் ரத்து செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மனு சொத்திற்கு இன்றைய தேதியில் யார் பெயரில் பதிவு செய்யப்ப;ட்ட கிரயப்பத்திரங்கள் மூலம் உள்ளது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு கிரயப்பத்திரங்கள் இருந்தால் பட்டா அவர்கள் பெயரில் மாற்றி தரப்படும் என்றால் அனுபவம் யார் செய்கிறார்கள் என்பதையும் பார்ப்போம். மனு சொத்து தற்போது யாரிடம் அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் நகர சார் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரி. டவுன் சர்வே எண்.26 என்பது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. டவுன் சர்வே செய்யப்பட்டதற்கு முன்னர் உள்ள கிராம புல எண் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் என்னிடம் இல்லை. Ex.C6ல் கிராம புல எண் பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது எந்த புல எண்ணிற்கு சம்மந்தப்பட்ட நகர புல எண் என்பதற்கு என்னிடம் ஆவணங்கள் இல்லை என்றால் சரி.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.